15.09.2025

/3/

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.</u>

<u>அசல் வழக்கு எண்.121/2016</u>

<u>பி.வா.சா. 1–சிங்கராஜ், த/பெ.கருப்பண்ண கவுண்டர்</u>

<u>சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது</u>

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வாதி செந்தில்குமார் கிரையம் பெற்ற கிரையாவணமான வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். நான் தாக்கல் செய்த சத்திண பிரமாண வாக்குமூலத்தில் வாதி செந்தில்குமார் வா.சா.ஆ.1 ஆவணப்படி கிரையம் பெற்ற சொத்திற்கு அப்பால் பாத்தியம் கோருகிறார் என்பது தான் என் கட்சி என்றால் சரிதான். வாதி செந்தில்குமார் கிரையம் பெற்ற சொத்தில் வடகிழக்கு மூலையில் ஒரு வட்ட கிணறு உள்ளது என்றால் சரிதான். அந்த கிணற்றின் சர்வே எண்.187/12 என்று சொன்னால் சரிதான். வட்ட கிணறு வாதியின் சொத்தில் கீழ்புற கோடியிலிருந்து மேல்புறம் கோடி வரை இல்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவண சொத்திற்கு கிழக்கு திசையில் தார்சாலை உள்ளது என்றால் சரிதான். வாதி செந்தில்குமார் விவசாயி என்று சொன்னால் சரிதான்.

15.09.2025



செந்தில்குமார் வாதி கிரையம் வாங்கிய சொத்தில் தார்சாலை ஒட்டியுள்ள நிலத்தில் கீழ்புறத்தில் வீடு, அதற்கு மேல்புறம் மாட்டுபட்டி உள்ளது என்றால் சரிதான். செந்தில்குமார் கிரையம் வாங்கும் போது தார்சாலையை ஒட்டியுள்ள நிலம் காலிநிலம் என்றால் சரிதான். செந்தில்குமார் கிரையம் வாங்கிய சொத்து வட்டகிணறு, அதற்கு வடபுறம் கிழமேல் பாதை உள்ளது என்றால் சரிதான். அந்த பாதையின் சர்வே எண்.187/11 என்று சொன்னால் சரிதான். அந்த கிழமேல் பாதையின் தென்வடல் அளவு எனக்கு தெரியாது. வாதி வழக்குரையில் சர்வே எண்.187/11ல் உள்ள பாதையின் தென்வடல் அளவு என்ன என்று குறிப்பிட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல, அதனுடைய அகலம் 3.6 மீட்டர் ஆகும். இந்த கிழமேல் பாதைக்கு வடபுறம் உள்ள சொத்து உங்கள் சொத்தா என்றால் சரியல்ல. கிழமேல் பாதைக்கு வடபுறம் உள்ள சொத்திற்கு மேல்புறம் சொத்து தான் என்னுடைய நிலம் என்றால் சரிதான். என் சொத்தின் சர்வே எண்.187/10 என்று சொன்னால் சரியாக நினைவில்லை. நான் சொல்வது போன்று 3.6 மீட்டர் அகலமுள்ள கிழமேல் பாதை அரசு புறம்போக்கு பாதை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய சொத்திற்கு வாதி செந்தில்குமாரின் கிரைய முன்னோர் 3.6 மீட்டர் அகலமுள்ள கிழமேல் பாதை

15.09.2025



வழியாக தான் தன்னுடைய மாட்டுப்பட்டிக்கு அழைத்து செல்வார்கள் என்று சொன்னால் இருந்தது. தாவா சொத்தின் வட்ட கிணற்றுக்கு வடக்கு திசையில் 3.6 மீட்டர் அகலமுள்ள கிழமேல் பாதை உள்ளதா என்றால் உள்ளது. தற்பொழுதும் இந்த கிழமேல் 3.6 மீட்டர் பாதை வட்ட கிணற்றுக்கு வடபுறமும், செந்தில்குமார் சொத்திற்கு வடபுறமும் இருப்பதை என்னால் அடையாளம் காட்ட முடியும். வாதி செந்தில்குமார் இரண்டு தாக்காக தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். முதல் தாக்கு வட்ட கிணற்றுக்கு தெற்கு திசையில் உள்ள நிலம் என்று சொன்னால் சரிதான். 2 வது தாக்கு இந்த முதல் தாக்கு நிலத்திற்கு மேற்கு திசையில் உள்ளது என்றால் சரிதான். இந்த 2 வது தாக்கின் வடபுறம் அத்து கிழமேல் பாதை என்று சொன்னால் சரிதான். 1 வது அயிட்ட சொத்திற்கு அத்து வட்ட கிணறு என்றாலும், 2 வது அயிட்ட சொத்திற்கு கிழமேல் பாதை என்றாலும் சரிதான். வாதி செந்தில்குமார் கிரையம் பெற்ற தாவா சொத்திற்கு மேற்கே சர்வே எண்.187/17 ல் அரசு புறம்போக்கு தென்வடல் பாதை உள்ளது என்றால் சரிதான். இந்த சர்வே எண்.187/17 ல் உள்ள அரசு புறம்போக்கில் உள்ள பாதை, வடபுறம் உள்ள சர்வே எண்.187/11 ல் உள்ள பாதையும், தென்புறம் உள்ள சர்வே எண்.187/21 கிழமேல் பாதையும் இணைக்கிறது என்று சொன்னால் சரிதான்.

15.09.2025



மூன்று சர்வே எண்கள் சர்வே எண்.187/17, சர்வே எண்.187/11, சர்வே எண்.187/21 ஆகிய மூன்று பாதைகளும் அரசு புறம்போக்கு பாதை என்று சொன்னால் சரிதான்.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.